**செய்தி வெளியீடு எண்:019** **நாள்: 08.01.2020**

**செய்தி வெளியீடு**

சென்னை – 32, கிண்டியில் இயங்கி வரும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் தொகுதி-I மற்றும் தொகுதி–II தேர்வுகளுக்கு கடந்த ஆகஸ்டு 9, 2019 முதல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போது இப்பயிற்சிகளை விரிவுபடுத்தி செவித்திறனற்ற மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கென பிரத்யேகமாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி–IV தேர்வுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகளை வாரந்தோறும் திங்கள் முதல் வெள்ளி வரை இம்மையத்திலேயே நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வகுப்புகளில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் (குறைந்த பட்ச கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி) மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரிலோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம் என வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் திரு.V.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

<u>முகவரி மற்றும் தொலைபேசி எண் :</u>

மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
A28 , முதல் தளம், டான்சி கார்ப்பரேட் தலைமை அலுவலகம்,
கிண்டி, சென்னை – 32.
Ph No: 044 - 22500134

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**